# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2019–ம் ஆண்டு மார்ச் மாதம் 08–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றப்பொருள் :– 1.** நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி – 2019 மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

**கோப்பு எண் . 3792/2018/இ1**

**தீர்மான எண் : 70 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றப்பொருள்:–2.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/AE–5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.47000/–ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மேலும் அங்கீகாரம் பெற்ற டீலர் SR CAR CARE , 5,Bye pass road , Singarathoppu , Chidambaram அவர்களிடம் பழுதினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.0229/2019/இ1)**

**தீர்மான எண் : 71 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்:–3. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2018 ஜூன் 5–ம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 110 விதிகளின் கீழ் தமிழ்நாடு மாநிலமானது பயன்படுத்தப்பட்டு வீசப்படும் நெகிழியை தடைசெய்யும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டத்தின் படி (மையச்சட்டம்.29/1986) 2019 ஜனவரி 1–ல் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்வதை, போக்குவரத்து செய்வதை, சேமித்து வைத்தலை, பகிர்ந்தளித்தலை மற்றும் பயன்பாட்டினை தடை செய்து, அறிவிப்பினை வெளியிட்டார்கள். இந்த நோக்கத்திற்காக அரசானது இந்திய அரசின் 1986–ம் ஆண்டு பிப்ரவரி 10–ம் தேதியிடப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண்.S.O–152(E)–ன் உடன் இணைந்த மையச்சட்டம் 29/1986ன் பிரிவு 5–ன் படி அறிக்கை வெளியிட்டுள்ளது. எழுத்து மூலமாகவும், செயல் ரீதியாகவும் பயன்படுத்தப்படும் மற்றும் தூக்கி வீசப்படும் நெகிழி பொருட்களை தடை செய்வதை நிறைவேற்றும் பொருட்டு, மேலே குறிப்பிட்ட நெகிழி பொருட்களை தடை செய்வது தொடர்பாக வகைமுறைகளை மீறும் போது பணத்தண்டம் விதிப்பதற்கு ஏதுவாக 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

I (i) **செயலாக்க அதிகாரி** : நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி** : ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர்,துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்** : இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்** : ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத் தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனைமுறைகள் மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள்

II (i) **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :–**

1. a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   e) 2000–ம் அதற்கு மேல்

III. **வணிக வளாகங்கள் :–**

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்,
b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,
c) திரையரங்குகள்,
d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்,
e) கல்வி நிறுவன வளாகங்கள்,
f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்,
g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,
h) பெரிய, நடுத்தர, காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், உணவகங்கள் பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,
i) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைக்காரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

II **தண்டனைகள் விவரம்** :–

**பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள் :–**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 25,000/– இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ரூ. 50,000/– ஐம்பதாயிரம் ரூபாய் | ரூ. 1,00,000/– ஒரு லட்சம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை | ரூ. 10,000/– பத்தாயிரம் ரூபாய் | ரூ. 15,000/– பதினைந்தாயிரம் ரூபாய் | ரூ. 25,000/– இருபத்தைந்தாயிரம் ரூபாய் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | | | |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 1,000/– ஓராயிரம் ரூபாய் | ரூ. 2,000/– இரண்டாயிரம் ரூபாய் | ரூ. 5,000/– ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 100/– ஒரு நூறு ரூபாய் | ரூ. 200/– இருநூறு ரூபாய் | ரூ. 500/– ஐநூறு ரூபாய் |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தினசரி நாளிதழில் மற்றும் அரசிதழில் விளம்பரம் வெளியிட ஆகும் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.3471/2011/எச்1</u>

<u>தீர்மான எண் : 72 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

**மன்றப்பொருள்:–4.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3 நாள் 05.03.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின்படி, அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் தமிழ்நாடுஅரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a) நாள் 04.02.2019ன்படி, நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள், கூடுதல் கட்டிடங்கள் மற்றும் புதிய மனைப் பிரிவுகள் அமைக்கும் போது நகரமைப்பு பிரிவு சட்ட விதிகளுக்கு உட்பட்டு கட்டிட அனுமதி மற்றும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உரிய கட்டிட அனுமதிக் கட்டணம், கட்டிட அபிவிருத்தி கட்டணம் மனைப்பிரிவுக்கான கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் தற்போதுள்ள நடைமுறையிலிருந்து **கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு** இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்ப கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்ப மாற்றியமைக்கவும், திருத்திய கட்டண விகிதங்களை மன்ற ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து பின்பு நடைமுறைக்கு கொண்டு வரவும், புதிய கட்டண விகிதங்களை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும், மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

- ❖ கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் அனுமதி வழங்கும் நடைமுறைகள் தற்போது நடைமுறையிலுள்ள இணையதளவழிகளில் பின்பற்றப்பட வேண்டும்
- ❖ உள்ளாட்சிகளால் வழங்கப்படும் திட்ட அனுமதி தற்போதுள்ள அதிகார பகிர்வு அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.
- ❖ தற்பொழுது கட்டிட விண்ணப்பத்துடன் கூர்ந்தாய்வு கட்டணமாக பெறப்படும் ரூ 500/-யை பதிவு கட்டணமாக தொடர்ந்து வசூலிக்க வேண்டும். கூடுதலாக விதி எண் 7(2)ல் குறிப்பிள்ளவாறு, நடைமுறையில் உள்ள அதிகார பகிர்வுக்கு உட்பட்டு திட்ட அனுமதிக்கான கூர்ந்தாய்வு கட்டணம் உள்ளாட்சிகளால் வசூலிக்கப்பட்டு உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

<u>*அலுவலக குறிப்பு*</u>

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை

செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்ப கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்குவழங்குவதற்கேற்பவும் மாற்றியமைக்க மன்ற அனுமதிக்கலாம்

2. புதிய கட்டண விகிதத்தினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்திற்கும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட வேண்டும். 01.06.2019 முதல் நடைமுறைபடுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ,எண் .715/2019/எப்1)**

**<u>தீர்மான எண் : 73 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>கட்டிட உரிமக் கட்டணங்கள் திருத்தியமைத்தல் குறித்த அறிவிப்பு</u>

**பார்வை :- நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண் 31159/2018/டிபி3 நாள்.05.03.2019**

நெல்லிக்குப்பம் நகராட்சியில் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படும் போது வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் இந்நகராட்சியின் நகர மன்ற தீர்மானம் எண் **262** நாள் 01.04.2017 முதல் புதிய கட்டணங்கள் மாற்றியமைத்து நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டு, இன்று வரையில் அதன் அடிப்படையில் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது.

திருத்தப்பட்ட 1920-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகள் 321(2), 328 மற்றும் 329-ன்படி, திருத்தியமைக்கப்பட்ட உத்தேச உரிமையாணைக் கட்டணங்கள் 01.06.2019 தேதி முதல் வசூலிக்கப்பட கீழ்க்காணுமாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எ | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | ஏற்கனவே வசூலித்த கட்டணம் | தற்போது வசூலிக்க உத்தேசிக்கப் பட்டுள்ள கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| 1 | 175 | மனை உட்பிரிவு அனுமதி கட்டணம் | - | | | |
| | | அ) 2 மனைகள் வரை | | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |
| 2 | 176 (அ) | காலியிடத்தை தெருக்கள் அங்கீகாரம் செய்ய மேற்பார்வை கட்டணம் (Layout Fees) | ஒரு ஏக்கர் அதன் பாகம் | **4600/–** | 7000/- | ஒரு முறை மட்டும் |
| 3 | -- | நகரமைப்பு ஆய்வரின் மனைப்பரிவு ஆய்வுக் கட்டணம்/பரிசீலனைக் கட்டணம் | ஒரு ஏக்கர் அதன் பாகம் | 4600/- | 5000/- | ஒரு முறை மட்டும் |
| 4 | 183 | அ) கட்டிடங்களுக்கு முன்னால் உள்ள தெருக்கள் மற்றும் புறம்போக்கு நிலத்தில் தற்காலிகமாக பந்தல், நிழல், தட்டி முதலியவைகள் போட்டுக் கொள்ள | – | **465/–** | 700/- | ஏழு தினங்கள் மட்டும் |
| | | ஆ)உற்சவம், மசூதிமற்ற விசேஷ காலங்களில் புறம்போக்கு நிலத்தில் பந்தல் போட | – | இலவசம் | இலவசம் | ஏழு தினங்கள் மட்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | இ) கல்யாணம் மற்றும் விஷேச காலங்களில் புறம்போக்கு நிலத்தில் பந்தல் போட | **500 சதுரடிக்குள்** | 465/- | 700/- | ஏழு தினங்கள் மட்டும் |
| 5 | 186 | **தெருக்களில் போக்குவரத்து இடைஞ்சல் இன்றி கட்டிட சாமான்கள் சேகரித்து வைக்க**<br>அ) .சாதாரண குடியிருப்பு | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ.அதன் பாகத்திற்கும் | அனுமதி கட்டணத்தில் 50% | உத்தேச கட்டுமான பரப்பிற்கு கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ 15/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| | | ஆ) அடுக்குமாடி மூன்று குடியிருப்புக்கு மேல் | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | இல்லை | உத்தேச கட்டுமான பரப்பிற்கு கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ 15/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| | | இ). பல அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் வணிகம் , தொழிற்சாலை அலுவலக கட்டிடங்கள் | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | -Do- | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ.15/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| 6 | 197, 199 | **<u>குடியிருப்பு கட்டடம்</u> (சாதாரணம் கட்டடம் /அடுக்குமாடி கட்டடம்)**<br>அ) RCC மற்றும் தட்டோடு தரைதளம் மற்றும் தரை கீழ்தளம் அமைக்க Basement floor, under ground floor and ground floor. | **1 ச.மீ** | **27.50** | **45.00** | ஐந்து ஆண்டுகள் |
| | | ஆ) முதல்மாடி கட்டிடம் கட்ட First Floor | ஒவ்வொரு 1 ச.மீட்டருக்கு | 34.50 | 50.00 | ஐந்து ஆண்டுகளுக்கு |
| | | இ) 2ம் தளம் கட்ட மற்றும் அதற்கு மேல் Second Floor and above | ஒவ்வொரு 1 ச.மீட்டருக்கு | 39.00 | 60/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 7 | | சுவர் (அ) வேலி முதலியவை அமைத்தல் 2.40 மீ உயரம் மேற்படாமல் | 1 மீ. நீளத்திற்கு மற்றும் அதற்கு மேல் | Lumpsum<br>230/- | 20/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 8 | | கிணறு (அ) ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதி | 1 க்கு | 120/- | 300/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 9 | | **<u>இடம் ஆய்வு கட்டணம்</u>**<br>அ) குடியிருப்பு (Inspection Charges) | ஒருமுறை மட்டும் | 465/- | 800/- | ஒரு முறை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆ) வணிகம் (Inspection Charges) | ஒருமுறை மட்டும் | 465/- | 1500/- | ஒரு முறை மட்டும் |
| 10 | | குடியிருப்பு வீடு கட்ட, மனை அங்கீகரிக்க | **1–க்கு** | இல்லை | 500/- | ஒரு மனைக்கு<br>ஒருமுறை மட்டும் |
| 11 | | குடியிருப்பு அல்லாத கட்டுமானங்கள் கட்ட மனை அங்கீகரிக்க (கடை, குடோன், அலுவலகம் கட்டுமானங்கள் கட்ட) | **1–க்கு** | இல்லை | 2000/- | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் |
| 12 | | இதர கட்டிட மனைகள் அங்கீகரிக்க (கல்வி தொழிற்சாலை , மருத்துவமனை, குடிசைத் தொழில் லேபர், ஓட்டல், கல்யாண மண்டபம் கட்ட) | **1–க்கு** | இல்லை | 2500/- | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் |
| 13 | | A. குளியல் அறை<br>B.கழிவறை<br>C. செப்டிக் டேங்க்<br>D.மாடி படிக்கட்டு<br>E.குளியல் அறை மற்றும் கழிவறை | ஒரு எண்ணிக்கை<br>“<br>“<br>“<br>“ | 120/-<br>120/-<br>120/-<br>**120/–**<br>120/- | 200/-<br>200/-<br>200/-<br>200/-<br>400/- | ஐந்து ஆண்டுகள் அனுமதி |
| 14 | | அ) மனைப்பிரிவு வரைபட நகல்<br>ஆ) கட்டிட வரைபட நகல் | ஒன்றுக்கு<br>“<br>“ | 30/- | 200/- | ஒரு முறை மட்டும்<br>“<br>“ |
| | | **<u>இதர கட்டணங்கள்</u>** | | | | |
| 15 | | மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (OHT) தனியாக அமைக்கும் பட்சத்தில் | ஒன்றுக்கு | இல்லை | 500/- | ஐந்து ஆண்டுக்கு |
| 16 | | **நகராட்சி வரைபட வரைவாளராக உரிமம் வழங்க** | | | | |
| | | a)பதிவுக் கட்டணம் | ஒருமுறை | - | 5000/- | நிதி ஆண்டு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | b)வைப்புத் தொகை | ஒருமுறை | - | 3000/- | ஒரு தடவை மட்டும் |
| | | c)உரிமம் புதுப்பித்தல் | ஒருமுறை | - | 2500/- | ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31ம் தேதிக்குள் கட்டணம் செலுத்த வேண்டும் தவறினால் 25% கூடுதலாக உரிமம் புதுப்பித்த தொகையில் சேர்த்து கட்டப்பட வேண்டும். |
| 18 | | சங்கிலி போட்டு இடத்தை அளந்து காட்ட | ஒரு சர்வே எண்ணிற்கு | 200/- | 300/- | ஒரு முறை மட்டும் |
| 19 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல் இன்றி கட்டிடம் வெள்ளைஅடித்தல் மற்றும் பெயின்ட் அடித்தல் | பட்டா இடத்திற்கு மட்டும் | இல்லை | இலவசம் | – |
| 20 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல் இன்றி சிமெண்ட் பூசுதல்,ஓடு,ஓலை மாற்றம் செய்ய | பட்டா இடத்திற்கு மட்டும் | 465/– | 500/– | முப்பது நாட்கள் மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | 204 | கட்டிட அனுமதி ஆணை வழங்கப்பட்ட கால அளவுக்குள் **(ஐந்து ஆண்டுகளுக்குள்)** கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலையில் மீண்டும் அமைப்பு படங்களுடன் புதியதாக மனு செய்து உரிய கட்டணங்கள் செலுத்தி புதியதாக கட்டட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். | பெறப்பட்ட கட்டட அனுமதி காலம் முடிவுற்ற நிலையில் | கட்டிட அனுமதி பெறும் பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் முழுவதும் செலுத்தி வரைபடங்கள் சமர்ப்பிக்க வேண்டும் | கட்டிட அனுமதி பெறும் பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் முழுவதும் செலுத்தி வரைபடங்கள் சமர்ப்பிக்க வேண்டும் | பெறப்பட்ட கட்டிட அனுமதி காலம் ஐந்தாண்டு முடிவுற்ற நிலையில் ஒரு மாதத்திற்கு முன்னர் மனுதாரர் விண்ணப் பித்தால் ஏற்கனவே செலுத்திய கட்டிட உரிமம் + அபிவிருத்திக் கட்டணத்தில் 75% கட்டணம் செலுத்தினால் போதுமானது. தவறினால் 100% கட்டணமும் செலுத்த வேண்டும் |
| 21 | | நகராட்சியால் வழங்கப்படும் சான்று (ஒன்றுக்கு) | சான்று ஒன்றுக்கு | 50/- | 200/- | ஒரு முறை மட்டும் |
| 22 | | நகர வரைப்படம் நகல் வழங்க (TOWN MAP) | நகல் ஒன்றுக்கு | **50/–** | 200/- | – |
| 23 | | மழைநீர் சேகரிப்பு தொட்டி (Rain Water Harvesting) | ஒரு முறை கட்டணம் | **500/–** | 2000/- | கட்டிடம் கட்டி மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து போட்டோவுடன் மனுதாரர் சமர்பித்தால் செலுத்திய |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகையுனை திருப்பி வழங்கப்படும் |
| 24 | | சர்வே புலப்பட நகல் மற்றும் ‘அ‘ பதிவேடு நகல் வழங்க (TSLR & FMB) | ஒரு புல எண்ணிற்கு | 200/- | 300/- | ஒரு முறை மட்டும் |
| 25 | | கட்டிட அனுமதி பெறும் முன்பு கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் | – | – | கட்டிட அனுமதி பெறும் முன்பு கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் | – |
| 26 | | தீர்மான நகல் வழங்க | **1 க்கு** | **50/–** | **200/–** | ஒரு முறை மட்டும் |
| 27 | | கட்டிட இடிமான அனுமதி பெற | **1 சதுர மீட்டர்** | இல்லை | 10/- | ஒரு முறை மட்டும் |
| 27 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மாறுதல் இன்றி கட்டிடம் பராமத்து செய்துகொள்ள | பட்டா இடத்திற்கு மட்டும் | 50/- | 200/- | ஒரு முறை மட்டும் |

**மன்றப்பொருள்:– 5.** தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.02.2019 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு–வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழை தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/– வழங்குதல் குறித்து அரசாணை (நிலை) எண் 20 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி3) துறை நாள் 13.02.2019 ல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் ஆகியவர்களிடமிருந்து அவ்வப்போது கூடுதல் அறிவுரைகள் வரப்பெற்றுள்ளன. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் தலைமை செயலர் அவர்களின் 22.02.2019 ம் தேதிய காணொலி ஆய்வு குறிப்பில் ஏற்கனவே கணக்கெடுப்பிற்கு பயன்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுக்கு பதிலாக புதிய விண்ணப்ப படிவத்தில் கூடுதல் விவரங்கள் பெற்று கணினியில் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது..அதன் படி இந்நகர் பகுதியில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டி, புதியதாக வரப்பெற்ற விண்ணப்பங்களை அச்சிட்டு பெறவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.35000/–த்தினை இந்நராட்சி பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசரஅவசியம் கருதி மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண் 427/2019/எச்2)**

**தீர்மான எண் : 74 அலுவலக குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் 6.** "பொங்கல் மலர் 2019 " ஐ முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை தனி அலுவலரின் முன் அனுமதியின் படி விளம்பரம் செய்ததில் தமிழ் முரசு (Kal Publications (p) Ltd ) நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 12500/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0814/2019/இ1)**

**தீர்மான எண் : 75 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.7.** "பொங்கல் மலர் 2019 " ஐ முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை தனி அலுவலரின் முன் அனுமதியின் படி விளம்பரம் செய்ததில் தினகரன் (Kal Publications (p) Ltd ) நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 9828/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0815/2019/இ1)**

**தீர்மான எண் : 76 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்8..** தமிழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை முன்னிட்டு "சிறப்பு மலர் 2018 " நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 146/செமதொ/2018 நாள்.10.10.2018ன் படி விளம்பரம் செய்ததில் தினசூரியன் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 9660/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 701/2019/இ1)**

**தீர்மான எண் : 77 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.9..** " **பாரத ரத்னா** " புரட்சித் தலைவர் டாக்டர் . எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2016–17 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்ட பணிகளின் விவரத்தை

கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 106/செமதொஅ/201 நாள்.14.08.2017ன் படி விளம்பரம் செய்ததில் தினசூரியன் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 12600/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1603/2017/இ1)**

**தீர்மான எண் : 78 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.10..** நெல்லிக்குப்பம் நகராட்சியில் வார்டு உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் மாநில நிதியின் கீழ் நகர மன்ற தீர்மான எண் . 273 நாள் 17.12.2013 ன் படி ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் எண். 2 வான்பாக்கத்தில் பொது கழிப்பிடம் கட்டும் (Coversional Toilet ) பணி முடிவுற்று தணிக்கை தடையும் முடிவுற்றதால் ஒப்பந்ததாரர் திரு .K . பழனிசாமி நெல்லிக்குப்பம் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை (EMD) ரூ. 10000/– செலான் நெ. 1402656 நாள் . 23.12.2014 திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 3447/2012/இ1)**

**தீர்மான எண் : 79 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி